செய்திகளைப் பத்திரிகைகளும் வெளியிடாமல், நாமும் அந்தச் செய்திகளை - எதிர்க்கட்சிகள் வேகமாகத்தான் செல்லவேண்டும் என்று கருதி அவற்றையெல்லாம் சொல்லாமல் மறைக்க வேண்டுமென்று நான் கூறவில்லை—நீங்கள் இருக்கின்ற காரணத்தினால்தான், இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றீர்கள்; தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டால்தான் அவற்றைத் திருத்திக்கொள்கின்ற அந்த முனைப்பான எண்ணம் ஆளுங்கட்சிக்கும் ஏற்படுகிறது. அந்த வகையில் இன்று காலையிலேயிருந்து இதுவரை நடைபெற்ற மருந்துகளைப் பற்றிய இந்த விவாதம் பயன்படும் என்ற நம்பிக்கையோடு இந்த அளவில் இதனை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் 13-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:*

திரு. மு. அப்பாவு

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. து. அமரமூர்த்தி

டாக்டர் க. நெடுஞ்செழியன்

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. சு. குணசேகரன்.

5. வரவு செலவுத் திட்டம், 2010–2011, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் - தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன்.*